KAYALPATTINAM MUNICIPALITY
FORM 3
Minutes of the Meeting held on 29.03.2012

| Date of the Council Meeting | Decision Number | Subject of the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| 29.03.2012 | 174 | **பொருள் எண் 1**<br>காயல்பட்டணம் நகராட்சி 9-வது வார்டு பகுதியில் குடிநீர் விநியோம் செய்திடவும், வால்வுத் தொட்டிகளுக்கு மேல்மூடி அமைத்திடவும், பழுதாகும் மின்விளக்குகளை உடனடியாக சீர் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், குப்பைகளை உடனடியாக அகற்றிடும் பொருட்டு பணியாளர்கள் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்திடவும், சாலைபணிகளினை துரிதமாக செய்து முடிக்கவும், குடிநீர் இணைப்பு, கட்டிட வரைபட அனுமதி, பெயர்மாற்றம், பிறப்பு இறப்பு பதிவு பற்றிய அலுவல்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வு காணும் பொருட்டு செயல்படவும் கேட்டுக் கொண்ட 9-வது வார்டு உறுப்பினர் திருமதி.ஹைரிய்யா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | பொருள் எண் 1<br>குடிநீர் இணைப்பு கட்டிட வரைபடம் பெயர்மாற்றம் போன்ற நகர்மன்ற சேவைகளுக்கு குறிப்பிட்டுள்ள வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் தீர்வ காணும் பொருட்டு தனித்தனி பதிவேடுகளில் பதியப்பட்டு பதிவு செய்யப்பட்ட வரிசைப்படி ஆய்வு செய்து அனுமதி வழங்க மன்றம் ஏகமனதாக தீர்மானிக்கிறது<br>பொருள் எண் 1-ல் குறிப்பிட்டுள்ள மற்ற விஷயங்கள் மன்றம் ஏற்று கொள்கிறது |
| | 175 | **பொருள் எண்: 2**<br>குலாம் சாகிபு தம்பி தோட்டத்தில் புதிதாக இரண்டு மின்கம்பங்கள் நாட்டி இரண்டு குழல் விளக்குகளும், மஹல்ரா நகர் புதிய குடியிருப்பில் புதிதாக ஒரு மின்கம்பம் நாட்டி ஒரு குழல் விளக்கும், 18-வது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக 11 குழல்விளக்குகளும், மேலும் முத்தாரம்மன் கோவில் தெரு, கோமான்புதூர் சத்துணவு மையம் மற்றும் நகராட்சி சாலை ஆகிய இடங்களில் உள்ள 3 குழல் விளக்குகளை மாற்றிவிட்டு சோடியம் விளக்காகவும், மேலும் 18-வது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் ஆபத்தான நிலையில் உள்ள 5-மின்கம்பங்களை மாற்றுமாறும் கேட்டுக் கொண்ட 18-வது வார்டு E.M.சாமி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும். | பொருள் எண் 2<br>காயல்பட்டணம் நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளின் புது மின்கம்பங்களை அமைக்க அதனை கணக்கிட்டு மின்வாரியத்திற்கு தெரியபடுத்தவும் மின்விளக்கு இல்லாத கம்பங்களில் கணக்கிட்டு புதிதாக மின்விளக்குகள் பொருத்தவும் சோடியம் விளக்குகள் தேவைப்படும் இடங்களில் கணக்கிட்டு சோடியம் விளக்குகள் அமைக்கவும் மின்வாரியத்திற்கு பிரேரணை அனுப்ப மன்றம் அனுமதி வழங்குகிறது. மேலும் மக்களின் |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலக குறிப்பு:-<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | உயிர் பாதுகாப்பை கருத்திற்கொண்டு மிகவும்ஆபத்தான நிலையில் உள்ள மின்கம்பங்களை அகற்றிவிட்டு புது மின்கம்பங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்க மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 176 | **பொருள் எண்: 3**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் எரியாமல் உள்ள விளக்குகளை சரி செய்திட துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளவும், காயல்பட்டணம் நகராட்சிக்கு தேவைப்படும் பல்வேறு பணியிடங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும், வார்டு தோறும் தெருப்பெயர்கள் பலகைகள் அமைக்கவும், மருத்துவமனைகளில் No Parking பலகை அமைக்கவும், காயல்பட்டணம் மருத்துவர் தெருவில் சாலையோரத்தில் ஆபத்தாக அமைந்திருக்கும் பாதாள குடிநீர் தொட்டியினை அகற்றிவிட்டு குடிநீர் அடிபம்பு அமைக்கவும், சாலையில் ஆதரவற்று சுற்றித்திரியும் ஆடு, மாடுகள் மற்றும் தெருநாய்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும், ஒருவழிப்பாதை அமைத்ததற்கு பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றவும், காயல்பட்டணம் பிரதான சாலை மற்றும் ஒருவழிப்பாதை சாலைகளில் இடையூராக உள்ள மரங்கைளை வெட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும், பழைய சென்ட்ரல் வங்கி மற்றும் எல்.கே. மேல்நிலைப்பள்ளி இடையில் ஆக்கிரமிப்பு செய்துள்ள 10 அடி பாதையை உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு திறக்கவும், பேருந்து நிலையம் அருகில் உள்ள நான்கு சாலையின் சந்திப்பில் காலை 7 மணி முதல் 10 மணி வரை கட்டிடத் தொழிலாளர்கள் பிரித்து அனுப்பும் வேலை நடைபெறுகிறது இவ்விடத்தில் கட்டிடத் தொழிலாளர்கள் 100 நபர்களுக்கு மேல் கூடுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் நிலை உள்ளது எனவே அவர்களை பேருந்து நிலைய வளாகத்தில் மாற்றியமைக்கவும், மேலும் இவ்விடத்தில் கோழி வியாபாரம் நடைபெறுவதால் போக்குவரத்தி நெரிசல் ஏற்படுகிறது அதனையும் வேறு இடத்திற்கு மாற்ற ஆவண செய்யவும், பப்பரப்பள்ளி அருகில் கோழிக்கழிவுகள் மற்றும் குப்பைகள் கொட்டப்படுகிறது இது பல்வேறு வியாதிகளுக்கு வழிவகுக்கிறது ஆகவே நமதூர் கோழிக்கடைகளுக்கு அறிவிப்பு செய்து கழிவுகளை | பொருள் எண் 3<br>காயல்பட்டணம் பிரதான சாலை மற்றும் ஒரு வழிபாதை சாலைகளில் உள்ள மரங்கள் இடையூறாக இருக்கும் பட்சத்தில் ஆர்.டி.ஓ.(R.D.O) அவர்களுக்கு தெரியபடுத்தி நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானிக்கிறது. மற்ற விஷயங்களின் சாதக பாதகங்களை ஆராய்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கே கொட்டாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், வருமைக்கோட்டிற்கு கீழ் உள்ள நபர்களை வருமைக்கோடு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளவும், மின்சார தட்டுப்பாடு காரணமாக குடிநீர் பம்பிங் செய்யும் இடத்தில் நகராட்சி சார்பாக புதிய ஜெனரேட்டர் அமைத்துக் கொடுத்தால் மின்தடையில்லாமல் குடிநீர் சீராக விநியோம் செய்திட வாய்ப்பிருக்கும், அதனை அமைத்து கொடுக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்ட 16-வது வார்டு உறுப்பினர் திரு.S.A.சாமு சிகாப்தீன் ஹாஜி அவர்களின் கடிதம் மனறத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர், ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | |
| | 177 | **பொருள் எண்: 4**<br>காயல்பட்டணம் நகராட்சி 4-வது வார்டுக்குட்பட்ட சாலைகளில் மேல் மணல் படிந்துள்ளதால் வாகனங்கள் செல்வதற்கும், பொது மக்கள் நடந்து செல்வதற்கும் மிகுந்த சிரமமாக உள்ளது எனவே சாலையில் படிந்திருக்கும் மணலை அகற்ற நடவடிக்கை எடுக்கவும், குறுக்கு தெரு மற்றும் அஹ்மது நெய்னார் பள்ளி அருகில் வேகமாக செல்லும் வாகனங்களை கட்டுப்படுத்தும் பொருட்டு வேகத்தடை அமைக்கவும், 4-வது வார்டு பொதுமக்கள் தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக கஷ்டப்படுவதால் மகுதூம் பள்ளி மையவாடியில் அமைந்திருக்கம் தண்ணீர் தொட்டியினை இயக்கும் பணியினை உடனடியாக அமுல்படுத்தவும், 4-வது வார்டுக்குட்பட்ட பகுதியில் சுபைதா மகளிர் மேல்நிலைப்பள்ளி அமைந்துள்ளது பள்ளி மாணவிகள் அதிகமாக குறுகலான பாதை வழியாக பள்ளிக்கு செல்கிறார்கள் பள்ளிக் கூடம் செல்லும் மாணவிகளும், இரவில் டியூசன் செல்லும் மாணவிகளும் நாய்களினாலும், ஆதரவின்றி சுற்றித்திரியும் மாடுகளாலும் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர் எனவே நாய் தொல்லையினை கட்டுப்படுத்தவும் மாடுகளை பிடித்து அபராதம் விதிக்கவும் கேட்டுக் கொண்ட 4-வது வார்டு உறுப்பினர் திருமதி.ஏ.டி.முத்து ஹாஜாரா அவர்களின் கடிதம் மன்றத்தின் | பொருள் எண் 4<br>காயல்பட்டணம் நகராட்சி 4 வது வார்டு பகுதியல் உள்ள மகுதூம் பள்ளி மையவாடியில் உள்ள தண்ணீர் தொட்டியின் நீரேற்று திறனையும் தொட்டியின் கட்டிடத்தன்மையும் தகுந்த பொறியாளர்களை கொண்டு ஆய்வு செய்த பிறகு தண்ணீர் ஏற்றுவதற்கு மன்றம் அனுமதி வழங்குகிறது. மற்ற விஷயங்களை மன்றம் ஏகமனதாக தீர்மானிக்கிறது |

| | | | |
|---|---|---|---|
| | | பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர், ஆணையர், சுகாதார ஆய்வாளர் மற்றும் பொறியாளர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | |
| | 178 | **பொருள் எண் 5**<br>காயல்பட்டணம் நகராட்சி 7-வது வார்டுக்குட்பட்ட பகுதி சுனாமி நகரில் உள்ள மக்களுக்கு இரவில் மீன் பிடித்து வருவதற்கு கடற்கரையில் மிகவும் இருளால இருப்பதால் அந்த பகுதி சுனாமிநகர் மக்களுக்கு கடற்கரையில் புதிதாக 10 மின்கம்பங்கள் அமைத்து விளக்கு அமைக்கவும், ஈக்கியப்பா தைக்கா மண்சாலையில் உள்ள மின் கம்பங்களில் மின்விளக்கு இல்லாததால் அங்குள்ள மின்கம்பங்களில் மின்விளக்கு அமைக்கவும், ஈக்கி அப்பா தைக்காவிலிருந்து கிழக்கு நோக்கி அண்ணா நகர் செல்லும் பாதையில் மின்விளக்கு இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் புதிதாக 15 மின்கம்பங்கள் அமைத்து மின்விளக்கு அமைக்கவும், முகைதீன்பள்ளி அருகே பின்பகுதியில் இருளடைந்திருப்தால் மசூதி அருகே ஒரு சோடியம் விளக்கு மற்றும் கிருஸ்த்துவ ஆலையம் அருகே ஒரு சோடியம் விளக்கும், சிங்கித்துறை 44-ம் எண் வீட்டின் அருகே உள்ள மின்கம்பத்திலிருந்து கடற்கரை முகைதீன் பள்ளி வாசலுக்கு செல்லும் மின் வயர் மேற்படி வீட்டின் மேல் உரசும் ஆபத்தான் சூழ்நிலையில் உள்ளது எனவே மேற்படி மின்கம்பத்தினை மாற்றியமைக்கவும் கேட்டுக் கொண்ட 7-வது வார்டு உறுப்பினர் திரு.ஜே.அந்தோணி அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | பொருள் எண் 5<br>நகர்மன்றதலைவர் நகர்மன்ற உறுப்பினர் கிராம நிர்வாக அதிகாரி ஆகியோருடன் இடம் பார்வையிட்டு சட்டத்திற்குட்பட்டு மன்றம் அனுமதி வழங்க தீர்மானிக்கிறது |

| | | | |
|---|---|---|---|
| | 179 | **பொருள் எண் 6**<br>காயல்பட்டணம் நகராட்சியில் பொதுநிதி பணிகள், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டப்பணிகளை, பிளாஸ்டிக் சாலைகள் திட்டப்பணிகள் போன்ற திட்டங்களில் நடைபெறும் திட்டப்பணிகளை மேற்பார்வையிடவும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2012-2013, பொது நிதி திட்டம்அ 2012-13 மற்றும் IUDM திட்டம் 2012-2013 முதல் 2015-2016 வரை மதிப்பீடுகள் தயாரிக்க வேண்டியிருப்பதாலும் பொது நிதித் திட்டம் 2011-2012, OPEN DEFECATION 2011-12, மற்றும் IUDM 2011-12-க்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோர இருப்பதாலும் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் அவர்களுக்கு உதவியாக தொழில்நுட்ப உதவியாளர் எவரும் இல்லாததாலும் ஏற்கனவே நகராட்சியில் தொழில் நுட்ப உதவியாளராக பணியாற்றி வரும் திரு.கே.செந்தில்குமார் என்பவரை 01.03.2012 முதல் 31.05.2012 வரை பணியமர்த்திக் கொள்ள நகராட்சி பணிமேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர்(பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.25,000/- மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>01.03.2012 முதல் 31.05.2012 வரை திரு.கே.செந்தில் குமார் என்பவரை தொழில்நுட்ப உதவியாளராக பணியமர்த்திக் கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25000-க்கு மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 6<br>பொதுபணி மேற்பார்வையாளர் அவர்களுக்கு உதவியாக தொழில்நுட்ப உதவியாளர் எவரும் இல்லாததால் தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரை 01.03.2012 முதல் 31.05.2012 வரை பணியமர்த்தி கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 180 | **பொருள் எண் 7**<br>காயல்பட்டணம் நகராட்சியில் மேலநெசவுத் தெரு சாலையானது மிகவும் மோசமாகி பொதுமக்கள் நடந்து செல்ல இயலாத நிலை உள்ளது. அந்த தெரு சாலையினையும் அதன் இணைப்பில் உள்ள பழுதடைந்த சிறு பாலத்தையும் மேம்பாடு செய்து தர வேண்டும் என்ற 12-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சுகு என்ற ரங்கநாதன் அவர்களின் வேண்டுகோளின்படி நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர்(பொ) சிறுபாலத்தையும் பார்வையிட்டு தயாரிக்கப்பட்ட உத்சேத மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 7<br>நகர்மன்றத்தின் நிதி நிலையைக்கருத்திற் கொண்டு நகர்மன்ற தலைவர் உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்ட பிறகு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்ய மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 181 | **பொருள் எண் 8**<br>காயல்பட்டணம் நகராட்சியில் 2-வது வார்டுக்குட்பட்ட சதுக்கை தெருவில் பெரிய பள்ளி முதல் ஆறாம் பள்ளி (குறுக்குத் தெரு வரை) தெரு வரை குடிநீர் விநியோகக்குழாய் பதித்து தர வேண்டும் என்ற 2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்ச பொறியாளர் (பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.50,000/- -க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 8<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 182 | **பொருள் எண் 9**<br>காயல்பட்டணம் நகராட்சி ஒரு வழிப்பாதை அமல்படுத்தப்பட்டுள்ள தாயிம் பள்ளி சந்திப்பிலிருந்து பெரிய நெசவுத் தெரு மற்றும் எல்.கே.லெப்பைத் தம்பி சாலை வழியாக புதிய பேரூந்து நிலையம் வரை உள்ள சாலையில், எல்.கே.லெப்பைத் தம்பி சாலையானது ஏற்கனவே 7.00 மீட்டர் அகலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. எனவே தாயிம்பள்ளி சந்திப்பிலிருந்து பெரிய நெசவுத் தெரு முடிவு வரை உள்ள சாலையினை அகலப்படுத்த நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர்(பொ) அவர்களால் தயாரிக்கப்பட்ட ரூ.12.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 9<br>தாயிம்பள்ளி சந்திப்பிலிருந்து பெரிய நெசவு தெரு முடிவு வரை சாலையினை அகலபடுத்தும் பணியில் முதலின் சாலையின் ஒரு பக்கத்து பணிகளை முடித்துவிட்டு மறுபக்கத்து பணிகளை ஆரம்பித்து செய்து முடிக்க மன்றம் தீர்மானிக்கிறது |
| | 183 | **பொருள் எண் 10**<br>காயல்பட்டணம் கடற்கரை ஒரு சுற்றுலா தளமாகும். அதிகமாக மக்கள் வந்து செல்கின்றனர் காயல்பட்டணம் நகராட்சியின் கடற்கரை அருகே இருபுறங்களிலும் அதிகமான கருவேல மரங்கள் வளர்ந்துள்ளது. இவற்றின் மறைவில் சில அசாதாரண சம்பவங்கள் நடக்கிறது என்றும் விஷப்பூச்சிகள் அதிகமாக இருக்கிறது என்றும் கடற்கரைக்கு வரும் பொதுமக்கள் புகார் தெரிவித்துள்ளனர். எனவே கடற்கரையின் வடபுறம் மற்றும் தென்புறத்தில வளர்ந்துள்ள கருவேல மரங்களை JCB இயந்திரம் மூலம் வெட்டி அப்புறப்படுத்த மதிப்பீடு ரூ.46000/-க்கு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 10<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 184 | **பொருள் எண் 11**<br>காயல்பட்டணம் நகராட்சி பணியாளர்கள் அலுவலக பயணமாக(பயணப்படி) சென்னை மற்றும் வெளியூர் சென்று வர அகும் சில்லரை செலவினத்திற்கு ஓராண்டு ஆகும் செலவு ரூபாய்.1,00,000/- நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 11<br>காயல்பட்டணம் நகராட்சி பணியாளர்கள் அலுவலக பயணமாக (பயணப்படி) சென்னை மற்றும் வெளியூர் சென்று வர ஆகும் செலவினத்தை பார்வையிட்டு மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 185 | **பொருள் எண் 12**<br>காயல்பட்டணம் நகராட்சி 8-வது வார்டு பகுதியை சார்ந்த பண்கடசாலை தெரு (புகாரி ஷரிப் பின்புறம்) மண்சாலையை தார்சாலையாக அமைக்க பொது நிதியிலிருந்து அமைத்து தர வேண்டியும், சுலைமான் நகரிலிருந்து தேங்காய் பண்டக சாலைக்கு போகும் தெருவில் உள்ள விளக்குகள் இல்லா மின்கம்பங்களில் மின்விளக்கு அமைத்து தரவும் கேட்டுக் கொண்ட 8-வது வார்டு உறுப்பினர் M.M.T.பீவி பாத்திமா அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | பொருள் எண் 12<br>அலுவலக குறிப்பு<br>ஏற்றுக் கொள்ளப்பட்டு மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 186 | **பொருள் எண் 13**<br>காயல்பட்டணம் நகராட்சி 1-வது வார்டு கடையக்குடி காலனி வீடுகள் பகுதியில் புதிய தார் சாலை அமைக்கவும், அருணாசலபுரம் பகுதியில் எட்டு பொது குடிநீர் குழாய்களை சீர் செய்யவும், கோமான் தெரு பகுதியில் 3 தெருக்களிலும் புதிதாக பொது அடிபம்பு அமைக்கவும், தெரு விளக்கு பணிகளை சீர் செய்ய மின்சார வாரியம் அலட்சியமாக செயல்படுவதால் அதனை தனியார் வசம் ஒப்படைக்கவும், தொழுகை வேலையில் மன்றக் கூட்டத்தினை 15 நிமிடங்கள் ஒத்தி வைக்கவும் கேட்டுக் கொண்ட 1-வது வார்டு உறுப்பினர் திரு.A.லுக்மான் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | பொருள் எண் 13<br>நகராட்சியின் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியார் வசம் ஒப்படைப்பதின் சாதக பாதகங்களை ஆராய்ந்து முடிவு செய்யவும் தொழுகை வேளையில் உறுப்பினர்கள் கூட்டத்தை விட்டு எழுந்து சென்று தொழுது வரவும் மன்றம் அனுமதி வழங்குகிறது |

| | | | |
|---|---|---|---|
| | 187 | **பொருள் எண் 14**<br>காயல்பட்டணம் நகராட்சிப் பகுதி 3-வது வார்டுக்குட்பட்ட நெய்னார் தெரு பிலால் பள்ளி பகுதியில் சுற்றி பொதுமக்களின் நடமாட்டம் அதிகமான உள்ளது மேலும் அதன் பகுதியில் ஒரு பெண்கள் தைக்காவும் உள்ளது எனவே அதன் பகுதியில் புதிதாக தெருவிளக்குகள் அமைக்கவும், நெய்னார் தெரு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மெனின் சுவிட்ச்கள் மற்றும் பியூஸ் கேரியர்கள் பழுதாகிவிட்டபடியால் தெருவிளக்குகளுக்கு நேரடியாக இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது எனவே அதனை உடனாயக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்ட 3-வது வார்டு உறுப்பினர் திருமதி.P.M.S.சாராஉம்மாள் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | பொருள் எண் 14<br>அலுவலக குறிப்பு ஏற்று கொள்ளப்பட்டு மன்றம் தீர்மானிக்கிறது |
| | 188 | **பொருள் எண் 15**<br>காயல்பட்டணம் நகராட்சிபகுதியில் தற்போது ஒருவழிச்சாலையாக பயன்படுத்தப்படும் தாயிம்பள்ளி முப்பனார் ஓடையில் இருந்து செல்லும் சாலையை புதிய பஸ்நிலையம் வரை உள்ள அந்த சாலையினை நெடுஞ்சாலைத் துறையிடம் ஒப்படைக்கவும், 10-வது வார்டு பரிமார் தெருவில் தார்சாலை அமைக்கவும், காயிதே மில்லத் நகர் சுலைமான ஒலி பள்ளி அருகில் உள்ள புதிய சாலை அமைத்து தரவும் கேட்டுக் கொண்ட 10-வது வார்டு உறுப்பினர் S.M.B.பதுருல் ஹக் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம் | பொருள் எண் 15<br><br>நகர்மன்றத்தின் தற்போதைய சூழலில் மன்றம் நெடுஞ்சாலைத்துறையிடம் ஒப்படைக்க அனுமதிக்கவில்லை மற்ற பொருட்களில் அலுவலக குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 189 | **பொருள் எண் 16**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதி 13-வது வார்டு பகுதி புதிய பேருந்து நிலையத்தில் மின்வாரியம் அலுவலகம் அமைவதற்கு தகுந்த இடவசதி செய்து கொடுக்குமாறும், புதிய பேருந்து நிலையத்தில் தபால் ஆபிஸ் கட்டிடம் கட்டி வாடகைக்கு கொடுத்து, மக்களின் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் செய்திடவும், புதிய பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் சார்வதிவாளர் அலுவலகத்தில் பெண்களுக்கு தனி இருப்பிட வசதி இல்லாத காரணத்தினால் அங்கு பெண்களுக்கு தனிஅறையும் கழிப்பறை வசதியும் செய்திடவும், சார்பதிவாளர் அலுவலகம் அருகே பேருந்து உள்ளே செல்லும் நுழைவுவாயிலில் இருபுறமும் மின்விளக்கு அமைக்கவும், புதிய பேருந்து நிலையத்தில் பயணிகள் நிற்கும் நிழற்கூடத்தில் மின்விளக்கு அமைத்து தருமாறும், IOB பேங்க் அருகில் உயர்கோபுர மின்விளக்கு அமைக்கவும், பவுசியா சூப்பர் மார்கெட் இருக்கும் சாலையின் இருபுறங்களிலும் ஆக்கிரமிப்புகளை அகற்றிதருமாறும் கேட்டுக் கொண்ட 13-வது வார்டு உறுப்பினர் திரு.எம்.எஸ்.எம்.சம்சுதீன் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிறக்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர், நகர்மன்ற உறுப்பினர், ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம். | பொருள் எண 16<br>அலுவலக குறிப்பு<br>ஏற்றுக்கொள்ளப்பட்டு<br>தீர்மானிக்கப்பட்டது |
| | 190 | **பொருள் எண் 17**<br>ஒரே குடிநீர் இணைப்பில் இரண்டு முறை குடிநீர் விநியோகிக்கப்படுகிறது, இதே வால்வுத் தொட்டியில் 9 இணைப்புகள் உள்ளது, 15-வது வார்டுக்குட்பட்ட பைபாஸ் ரோடு ரேஷன் கடைக்கு எதிவே உள்ள வால்வுத் தொட்டியினை சீர் செய்திடவும், புதிய குடிநீர் இணைப்பு வழங்கும் பொழுது போர்பிட் பார்க்கும் பொழுது வார்டு உறுப்பினர்களின் பார்வைக்கு கொண்டு செல்லவும், சாலையில் அனாதையாக சுற்றித் திரியும் கால்நடைகளினை கட்டுப்படுத்த ஏற்கனவே தீர்மான நிறைவேற்றப்பட்டும் நடவடிக்கை ஏதும் இல்லாத காரணத்தினால் அதனை துரிதமாக நிறைவேற்றவும், வால்வுத் தொட்டி லீக், குடிநீர் குழாய் உடைப்பு லீக் சரி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளவும் கேட்டுக் கொண்ட 15-வாது வார்டு உறுப்பினர் திரு.K.ஜமால் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>நகர்மன்ற தலைவர் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோருடன் இடம் பார்வையிட்டு முன்னுரிமை அடிப்படையில் பணி தேர்வு செய்து நகராட்சி நிதிநிலைக்கேற்ப பணி செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம் | பொருள் எண் 17<br>புதிய குடிநீர்இணைப்பு வழங்கும் பொழுது போர்பிட் பார்க்கும் பொழுது வார்டு உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்று மன்றம் தீர்மானிக்கிறது. மற்ற விஷயங்களில் அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு மன்றம் தீர்மானிக்கிறது |

| | | | |
|---|---|---|---|
| | 191 | **பொருள் எண் 18**<br>பார்வை:-<br>(1) மனு எண்☹M.P) 9987/2008 மற்றும் M.P. (M.D) 2/2008.<br>(2) சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்திரவு நாள்:-10.02.2012.<br>(3) மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் உத்திவு ந.க.எண்:-டி4/8153/2012 நாள்:- 09.03.2012.<br>காயல்பட்டணம் நகராட்ியெ ண்ணாக்குடி பஜார் தெரு காயல்பட்டணம் பழைய சர்வே எண்:-468/1A மற்றும் புதிய சர்வே எண்:-762-ல் உள்ள இடமானது நகராட்சிக்கு சொந்தமான இடமாகும் அதில் திருமதி.எம்.எம்.நூர்ஜஹான் என்பவரால் ஆக்கிரமித்து வணிக வளாகம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி இடம் சம்பந்தமான வழக்கு சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் பார்வை(1)ல் கண்டவாறு வழக்கு நடைபெற்றது. தற்பொழுது அந்த இடம் நகராட்சிக்கு சொந்தமான இடம் எனவும் அதில் ஆக்கிரமித்து கட்டியுள்ள வணிக வளாகத்திதை மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் அனுமதி பெற்று இடித்து அப்புறப்படத்த வேண்டும் என்று பார்வை (2)-ல் கண்டவாறு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை (3)-ல் கண்டவாறு மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களால் உத்திரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் நகராட்சி மூலம் 11.03.2012, 12.03.2012 மற்றும் 13.03.2012 ஆகிய நகராட்களில் வருவாய்தறை ஊழியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் துணையுடன் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. மேற்கண்ட அக்கிரமிப்பு அகற்றப்பட்டதற்கு செலவிடப்பட்ட தொகை ரூ.89300/- நகர்மன்ற பார்வைக்கும் தகவலுக்கும்.<br>**அலுவலக குறிப்பு:-**<br>சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை உத்திரவுப்படியும், மாவட்ட ஆட்சியர் தூத்துக்குடி அவர்களின் உத்திரவுப்படியும் ஆக்கிமிப்புகள் அகற்றப்பட்டதற்கு செலவிடப்பட்ட செலவினத் தொகை ரூ.89300/- மன்றம் அனுமதிக்கலாம். | பொருள் எண் 18<br>மேற்படி தொகைக்கு ரூ.89300/-ஐ மன்றம் அங்கீகரிக்கிறது. மேலும் அப்புறப்படுத்தப்பட்ட கட்டிடங்களின் உரிமையாளரிடம் அதற்குரிய கட்டணங்களை அரசு விதிமுறையின் படி வசூல் செய்திட மன்றம் ஆணையரிடம் அறிவுறுத்தல் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது |

192

**பொருள் எண் 19**

காயல்பட்டணம் நகராட்சியில் பிளாஸ்டிக் சாலை அமைக்கும் திட்டம் 2011-12-ன் கீழ் கீழ்கண்ட பணிகள் பிளாஸ்டிக் சாலைகளாக அமைக்க 03.02.2012 அன்று நடந்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்தகாரரின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்த வகை |
|---|---|---|---|---|
| 1 | அருணாச்சலபுரம் மயான சாலை பிளாஸ்டிக் சாலை அமைத்தல் | 2.10 | 1. திருமதி.T.தங்கப்பூ காயல்பட்டணம். | 0.94% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் (ரூ.188136) |
| | | | 2. திரு.R.தலவாணிமுத்து பூந்தோட்டம் | 0.02% மதிப்பீடு ரேட்டை விட குறைவு (ரூ.186330) |
| 2 | வண்ணாக்குடி கடைத் தெரு சாலை பிளாஸ்டிக் சாலை அமைத்தல் | 5.00 | 1. திருமதி.T.தங்கப்பூ காயல்பட்டணம். | 0.94% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் (ரூ.460240) |
| | | | 2. திரு.R.தலவாணிமுத்து பூந்தோட்டம் | 0.02% மதிப்பீடு ரேட்டை விட குறைவு (ரூ. 455840) |
| 3 | கொச்சியர் தெரு சாலை பிளாஸ்டிக் சாலை அமைத்தல் | 3.50 | 1.திருமதி.F.முனவரா, காயல்பட்டணம். | 0.54% மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் (ரூ.327450) |
| | | | திரு.S.பால்ராஜ், கீழக்கரை | 0.11% மதிப்பீடு ரேட்டை விட குறைவு (ரூ.325359) |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த மதிப்பீடு கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 19
பிளாஸ்டிக் சாலை அமைப்பதற்கான விதிமுறைகளை பின்பற்றி சாலைகள் அமைத்திட அறிவுறுத்தி குறைந்த மதிப்பீடுகோரியுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கிறது

| | | | |
|---|---|---|---|
| | | **அலுவலக குறிப்பு:-**<br>குறைந்த மதிப்பீடு கோரியுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் அங்கீகரிக்கலாம். | |

| | | | |
|---|---|---|---|
| | 193 | **பொருள் எண் 20**<br>காயல்பட்டணம் நகராட்சி ஒப்பந்த அடிப்படயில் பணிபுரிந்து வரும் 13 பணியாளர்களின் ஒப்பந்தம் மார்ச் - 2012 முதல் முடிவடைவதால் அன்னாரின் ஒப்பந்ததை மேலும் 89 நாட்களுக்கு மட்டும் நீடித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 20<br>மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 194 | **பொருள் எண்:-21**<br>காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் ஆதரவின்றி சுற்றித்திரியும் சுமார் 300 நாய்களுக்கு கருத்தடை அறுவை செய்யும் பொருட்டு ஒரு நாய்க்கு ரூ.450/- வீதம் 300 நாய்களுக்கு செலவாகும் மதிப்பீட்டு தொகை ரூ.135000/- மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். | பொருள் எண் 21<br>உடனடி நடவடிக்கை எடுக்க மன்றம் அனுமதி வழங்குகிறது |
| | 195 | **பொருள் எண்:22**<br>பார்வை:-<br>1. மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி அவர்களின் சுற்றறிக்கை நகஎண்.டி4/ப.வெ.263/11-2<br>நாள்:27.06.2011<br>2. மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி அவர்களின் காயல்பட்டணம் | பொருள் எண் 22<br>செலவின தொகை ரூ.18000/- வழங்க மன்றம் அனுமதிக்கிறது |

| | | | |
|---|---|---|---|
| | | ஒருவழிப்பாதை நேரடி<br>ஆய்வு நாள்.30.12.2011.<br>காயல்பட்டணம் நகராட்சியில் தாயிம்பள்ளி சந்திப்பிலிருந்து பெரிய நெசவுத்தெரு மற்றும் எல்.கே. லெப்பைத்தம்பி சாலை (கூலக்கடை பஜார்) வழியாக நகராட்சி புதிய பேரூந்து நிலையம் வரை உள்ள சாலையானது ஒரு வழிப்பாதையாக மாற்றப்படுவதாகவும் அதில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பார்வை (2) ல் கண்ட நேரடி ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் நகராட்சியின் மூலம் வருவாய்த்துறை அலுவலர்கள் உதவியுடன் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங்கள் கண்டறியப்பட்டு ஆக்கிரமிப்பை அகற்ற அவர்களுக்கு முறையாக அறிவிப்பு செய்யப்பட்டது. ஆக்கிரமிப்பு அகற்றப்படாத இடங்களைவருவாய்த்துறை அலுவலர்கள் மற்றும் காவல்துறை உதவியுடன் நகராட்சியின் மூலம் உடனடியாக அகற்றவேண்டும் என்ற மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேரடி அறிவுறுத்தலின்படி 26.02.2012 அன்று காயல்பட்டணம் ஒருவழிப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்பு வருவாய்த்துறை அலுவலர்கள் மற்றும் காவல்துறை முன்னிலையில் நகராட்சின் மூலம் அகற்றப்பட்டது. அதற்கான செலவினத்தொகை ரூ.18000/- த்தை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>மாவட்ட ஆட்சியர்,தூத்துக்குடி அவர்களின் நேரடி அறிவுறுத்தலின்படி செய்யப்பட்ட செலவினத்தொகை ரூ.18000/-த்தை | |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்க மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 196 | **பொருள் எண்:23**<br>காயல்பட்டணம் நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் கோரிக்கைகள்.<br>1. நகரில் நாய்கள் தெருக்களில் அதிகமாக திரிவதாகவும், அதனால் பொது மக்களுக்கு ஆபத்து ஏற்படுவதாகவும் புகார்கள் பெறப்பட்டுள்ளது. அவ்வாறு தெருக்களில் பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் திரியும் நாய்களுக்கு - அதற்குரிய தடுப்பூசி போட்டு ஆபத்தினை நீக்குவது குறித்த அனுமதி.<br>2. காயல்பட்டணம் நகர்மன்ற பராமரிப்பில் இருக்கும் பேரூந்து நிலையத்தின் பயணியர் அமரும் பகுதியில் ஆண்கள் பகுதி பெண்கள் பகுதி என தடுப்பு சுவர் கட்ட அனுமதி.<br>3. காயல்பட்டணம் நகர்மன்ற கட்டுப்பாட்டில் உள்ள 17/19 உயர்நிலை குடிநீர் தொட்டிகளை முறையாக சுத்தம் செய்ய போதிய ஆட்கள் நகர்மன்றத்தில் இல்லை. ஆகவே அணைத்து தொட்டிகளைகம் மாதம் ஒரு முறை / இரு மாதத்திற்கு ஒரு முறை சுத்தம் செய்ய டெண்டர் விட அனுமதி.<br>4. காயல்பட்டணம் நகராட்சியில் உள்ள சாலைகளில் ஓரத்தில் மரக்கன்றுகள் நட்டு, அதனை பராமரிக்க - நகர்மன்ற பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்ய - அனுமதி.<br>5. நகர்மன்ற கூட்டத்தினை நல்ல முறையில் நடத்த - ஒளி உள்வாங்கிகள் (Microphone), ஒளி பெருக்கி (Speaker) ஆகியவற்றை வாங்க ஒப்பந்த புள்ளிகள் பெறுவது.<br>6. நகர்மன்ற சேவைகளை பெற விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் போது - அதனை பதிவேட்டில் பதிவு செய்து, அதற்கான பெறப்பட்ட | பொருள் எண் 23<br>1. மன்றம் அனுமதி வழங்கியது<br>2. மன்றம் அனுமதி வழங்கியது<br>3. மக்களின் சுகாதார நலன் அடிப்படையினை கருத்திற்கொண்டும் போதிய பணியாட்கள் சுத்தம் செய்வதற்கு நகர்மன்றத்தில் இல்லாததனை கருத்திற்கொண்டும் டெண்டர் விட மன்றம் அனுமதி வழங்குகிறது<br>4. மரங்களின் பராமரிப்பிற்கு நகர்மன்ற பட்ஜெட்டில் நிதி ஒதுக்க வேண்டும் என மன்றம் தீர்மானித்தது<br>5. மன்றம் அனுமதி வழங்குகிறது<br>6. நகர்மன்ற சேவைகளில் தாமதங்கள் ஏற்படுவதை தவிர்க்கவும் முறையாக முன்னுரிமை அடிப்படையில் சேவைகள் மக்களுக்கு துரிதமாக கிடைத்திடவும் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை கண்டிப்பாக பதிவேட்டில் பதிவு செய்து பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு உடனடியாக ஒப்புதல் ரசீது வழங்க நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானித்தது<br>7.காயல்பட்டணம் நகராட்சியில் குறைந்த விலை பணிகளை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களை பதிவு செய்ய செய்து அவர்களிடம் முறையான விலைபுள்ளிகள் பெற்று பணி வழங்க ஆவண செய்ய மன்றம் அனுமதி வழங்குகிறது<br>8. மன்றம் அனுமதி வழங்குகிறது<br>9. மன்றம் அனுமதி வழங்குகிறது<br>10. நகர்மன்றத்தின் ஒவ்வொரு மாத |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்புதல் ரசீது வழங்குவது குறித்த அனுமதி.<br>7. நகர்மன்றத்திற்கு தேவைப்படும் - சிறு தொகை சேவை/பொருட்கள் தேவைகள் (எழுதுபொருட்கள், அச்சு பணிகள், வண்ணப்பூச்சு பணிகள், JCB போன்ற பணிகள், ஷாமியான/இருக்கை, ஒலிபெருக்கி போன்ற சேவைகள்) முறைப்படுத்த ஒவ்வொரு பணிக்கும், ஒப்பந்தபாரர்களை பதிவு செய்யும் முறையை அமல்படுத்தி, அவர்களிடம் இருந்து முறையாக விலைப்புள்ளிகள் பெற்று, பணி வழங்குவது குறித்த அனுமதி.<br>8. நகர்மன்ற ஒப்பந்தப்புள்ளி கோரிக்கைகள் அனைத்தையும் மாவட்ட கெஜட்டில் விளம்பரபடுத்துவது குறித்த அனுமதி.<br>9. காயல்பட்டணம் நகர்மன்றத்தில் அனைத்து வகுப்புகளுக்கும் புதிதாக ஒப்பந்தகாரர்களை பதிவு செய்ய கோரி மாவட்ட கெஜட்டில்/பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிடுவது குறித்த அனுமதி.<br>10. காயல்பட்டணம் நகர்மன்றத்திற்குரிய வங்கி கணக்குகளில் ஒவ்வொரு மாதமும் Deposit செய்யப்படும் தொகை விபரம், பற்று - வரவு செய்யப்படும் தொகை விபரம், செக் வழங்கப்படும் விபரம் - ஆகியவற்றை தொகுத்து, தொடரும் நகர்மன்ற கூட்டத்தில் உறுப்பினர் பார்வைக்கு தாக்கல் செய்வது குறித்த அனுமதி.<br>11. காயல்பட்டணம் நகர்மன்றத்தில் வழங்கப்படும் - பிறப்பு/இறப்பு சான்றிதழ்கள், கட்டிட அனுமதி, புதிய குடிநீர் இணைப்பு வேண்டுதல், பெயர் மாற்றம் - போன்ற சேவைகளுக்கு புதிதாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் எண்ணிக்கை, சேவை வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை நிலுவையில் இருக்கும் விண்ணப்பங்களில் எண்ணிக்கை, ஆக முந்தைய தேதியில் நிலுவையில் இருக்கும் விண்ணப்பம் ஆகிய தகவல்களை ஒவ்வொரு மாத முடிவிலும் தயாரித்து - காயல்பட்டணம் நகர்மன்றம் இணையதளத்தில் வெளியிடுவது குறித்த அனுமதி. | கூட்டத்திற்கு முன்பும் நகராட்சியின் வரவு செலவு வங்கி கையிருப்பு போன்ற விபரங்களை ஆதாரத்துடன் சமர்ப்பிக்கபடவேண்டும் எனவும் அது குறித்து நடவடிக்கை எடுக்க ஆணையரை கேட்டு கொள்வது எனவும் மன்றம் தீர்மானித்தது<br>11. நகராட்சி சேவை பணியில் பொருள் எண் (23) 11-ல் கூறப்பட்டவை அனைத்து விபரங்களையும் நகர்மன்ற இணையதளத்தில் கண்டிப்பாக வெளியிட நடவடிக்கை எடுக்க மன்றம் தீர்மானித்து<br>பொருள் எண் (23) 12,13,14,15,16 ஆகிய வற்றில் கூறப்பட்டுள்ள அனைத்து விஷயங்களுக்கும் மன்றம் அனுமதி வழங்கியது<br>17. பொருள் எண் (23) 17-ல் தற்காலிக பணியாளர்களை 89 நாட்கள் மட்டும் பணி நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதி வழங்கியது |

12. காயல்பட்டணம் நகராட்சி மூலம் வெளியிடப்படும் அனைத்து டெண்டர் விபரங்களையும் - காயல்பட்டணம் நகராட்சி இணையதளத்திலும் முழுமையாக வெளியிடவும், டெண்டர் தேதி முடிவுற்றப்பிறகும் அதனை நீக்காமல் இணைத்தளத்தில் வைக்கவும் அனுமதி.
13. நகர்மன்றத்தினால் வழங்கப்படும் அனைத்து வேலை ஆணைகளையும் (Work Orders) உடனுக்குடன் காயல்பட்டணம் நகர்மன்ற இணையதளத்தில் வெளியிடுவது குறித்த அனுமதி.
14. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் விண்ணப்பங்கள் குறித்த விபரங்களை (சாராம்சம், பெறப்பட்ட தேி, பதில் அனுப்பப்பட்ட தேதி போன்ற) காயல்பட்டணம் நகர்மன்ற இணைதளத்தில் வெளியிடுவது குறித்த அனுமதி.
15. காயல்பட்டணம் நகராட்சி - இரண்டாம் நிலை என தர உயர்வு பெற்று 18 மாதங்களாகியும் மூன்றாம் நிலை நகராட்சி என்றே நகர்மன்ற வளாக பலகைகளிலும், நகர் எல்லைகளில் உள்ள பலகைகளிலும் உள்ளது. அதனை உடனடியாக இரண்டாம் நிலை என மாற்ற நடவடிக்கை எடுப்பது.
16. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நகர்மன்றம் கொள்முதல் செய்துள்ள அனைத்து பொருட்களின் தற்போதைய கையிருப்பு விபரங்கள் (Stock Taking) சேகரித்து - மன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும், முதல் கையிருப்பு விபரங்கள் சேகரிப்பு - மார்ச் 31 அன்று நடத்தவும் அனுமதி.
17. காயல்பட்டணம் நகர்மன்றத்தில் தற்காலிக பணியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள 13 நபர்களுக்கு கடந்த ஆண்டு வழங்கப்பட்ட வேலை நீட்டிப்பு மார்ச் 31, 2012 அன்று முடிகிறது. அது குறித்து முடிவு எடுப்பது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | 197 | **பொருள் எண்:24**<br>.காயல்பட்டணம் நகராட்சியில் அமைந்துள்ள மாவட்ட நூலகத்தில் இடநெருக்கடி காரணமாக நூலகத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்ட அரசின் தன்னிறைவு திட்டத்தின் கீழ் நகராட்சி பொறியாளர் அவர்களால் மதிப்பீடு ரூ.14.00 லட்சத்தில் தயார் செய்யப்பட்டு பொதுமக்கள் பங்களிப்பு ரூ.7.00 லட்சத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு காசோலை (D.D.) மூலம் சமர்ப்பிக்கப்பட்டதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் பங்களிப்பு ரூ.7.00 லட்சம் பெற்று திட்டம் நிறைவேற்றப்பட இருப்பது மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலக குறிப்பு<br>பார்வையிட்டு பதிவு செய்யலாம் | பொருள் எண் 24<br>மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கி திட்டம் நிறைவேற்ற ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது |